ESTD : 1947

விருதுநகர் இந்து நாடார்கள் செந்திக்குமார நாடார் கல்லூரி (தன்னாட்சி), விருதுநகர்.
தேசிய தர மறுமதிப்பீட்டின் கீழ் 'ஏ' அந்தஸ்து தகுதி பெற்றது
குறைந்த கட்டணத்தில் உயர்தரக் கல்வி

* * * * *

20.12.2023

## சுற்றறிக்கை

கடந்த சில நாட்களாக தமிழகத்தின் தென் மாவட்டங்களில் பெய்து வந்த கனமழையால் அம்மாவட்டங்களில் வசிக்கும் மக்கள் பெரும் பாதிப்பிற்கு உள்ளாகி வீடு, உடைமை போன்றவற்றை இழந்து சொல்லொணாத் துன்பங்கள் அடைந்துள்ளனர். அம்மக்களுக்கு உதவிக்கரம் நீட்டும் விதமாய் நிவாரணநிதி திரட்டுவதற்கு நமது கல்லூரியும் முன்வந்துள்ளது. நமது கல்லூரியின் ஆசிரியர்கள், அலுவலர்கள் மற்றும் மாணவ/மாணவியர்கள் தங்களால் இயன்ற நிதியை வழங்கலாம். தேசிய மாணவர் படை, நாட்டு நலப் பணித் திட்ட மாணவர்கள் மூலம் நிதியானது 21.12.2023 முதல் 27.12.2023 வரை நேரடியாக உண்டியல் மூலம் வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இதன்மூலம் அவர்கள் அடைந்த பெருந்துன்பத்தின் அளவை சிறுதுளி அளவேனும் துடைக்க முடியுமென்ற நம்பிக்கையில் இச்செயல் மேற்கொள்ளப்படுகிறது.

கல்லூரி முதல்வர்

பெறுநர்

ஆசிரியர்கள், அலுவலர்கள், மாணவ/மாணவியர்கள்
வகுப்பு சுற்றறிக்கை மற்றும் துறை அறிவிப்புப்
பலகைக்கு - துறைத் தலைவர்கள் மூலமாக.